

# காஞ்சி வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2004 மார்கழி 29 (13-1-74) | இதழ்: 27


★

**உள்ளே......**


ஓட்டாண்டியாக்கிவிட்டு
(தம்பிக்கு அண்ணாவின் மடல்)

★

குமுதத்தின் குருட்டுத்தனம்

★

அணைப்பு
(சிறுகதை)

★

என்னடி சிரிப்பு?

★

மெல்லிய காதல்
(தொடரோவியம்)


★

# தேனமுதம் தாராயோ?

**கவிஞர். மணிவேந்தன்**

★

**எடுப்பு:**

வாடாத மலரே நீ வாராயோ-வந்து
வற்றாத தேனமுதம் தாராயோ?

**தொடுப்பு:**

பனிதரும் இதழுடன் கிளிதரும் மொழியுடன்
கனிதரும் எழிலுடன் ஒளிதரும் விழியுடன்
[வாடாத ..]

**முடிப்பு:**

தேன்சிந்தும் இதழ்மீது நான்சிந்துக் கவிபாட
மீன்நீந்தும் முகம்மீது நான்நீந்திக் களித்தாட
வான்தந்த கருங்கூந்தல் வனத்தில் நான் ஒளிந்தாட
மான்தந்த விழியோடு, விழியே! நான் கலந்தாட
[வாடாத ...]

சலசலக்கும் முந்தானைக் கிறுகிறுப்பில் ஆழ்த்திவிட
கலகலக்கும் வளையொலிக்கும் கமலமலர்க்கரம்பிடிக்க
பளபளக்கும் மேலாடை பக்குவமாய் நழுவிவிழ
தளதளக்கும் செம்மேனி தக்காளி போல்சிவக்க
[வாடாத ...]

★

விலை: 0-25 காசு

# என்னடி சிரிப்பு?

— புலவர். பொன்னிவளவன்

பொன்னாய் மின்னிப் பூவாய்ச் சிரிக்கப் பெண்ணாய்ப் பிறந்துவிட்டவள் அவள். விண்ணிலே நிலவு! மண்ணிலே இவள்! அங்கா? இங்கா? எங்கே இருப்பது என்று புரியாமல் தெரியாமல் அழகு கிடந்து திண்டாடும்! ஆட்டத்தில் அவள் மயில்! பாட்டில் அவள் குயில்! துள்ளலில் அவள் மான்! அவள் சொற்களிலோ சொட்டும் தேன்! நடையிலே அவள் அன்னம்! அவளுக்கு மாம்பழக் கன்னம்! உதடுகள் அவளுக்குத் தேன் கிண்ணம்!

சிரிப்பில் அவளிடம் தோற்கும் முத்து! சிங்காரி அவள் பலர் நெஞ்சிற்கு இனிக்கும் கனிக் கொத்து! அவளுக்கோ ஒருவன் மேல்தான் மனப்பித்து!

கொஞ்சிவரும் கோகிலமே! கோமளமே! குளிர் நிலவே! நெஞ்சத்துத் தாமரையே! நித்திலமே! ரத்தினமே!' இப்படிக் கொஞ்சி இதழ் திறந்து இதழ் விருந்து வைத்தவனா அவன்? இல்லை? இன்னும் அவன் பேசத் தொடங்கவில்லை இருந்தாலும் அவன் விழிகளில் ஆசை அடங்கவில்லை! பழுத்த பழமாக அவளை மதித்துப் பல்லில்லாத விழிகளால் மென்று விழுங்கினான். யார் நீ? இப்படி அவனைக் கேட்க முடியவில்லை! அவன் எடுத்துச் சென்றுவிட்ட இதயத்தையும் அவனிடமிருந்து மீட்கமுடியவில்லை.

அரும்பாக இருந்து குறும்போடு திரிந்த நாளில் ஆண் துணையை விரும்பாத பெண்தான். இப்போதோ பூத்த மலரானாள்; புரியாத புதிருக்குச் சரியான விடை தேடிக் காத்திருந்து வரலானாள்! முன்போ குங்குமம் அவள் நெற்றிக்குத் திலகம். விளையாட்டு அவள் தனி உலகம்! இப்போதோ குங்கும வண்ணம் அவள் கன்னத்தில் பழகும்! குதித்துக் கும்மாளமிடும் துணிவு அவள் இதயத்தை விட்டு விலகும்! அவளோ அழகின் திருஉருவம்! அழகை அவளிடத்தில் ஒப்படைத்து அவளை ஆட்டிப் படைக்கிறது பருவம்! மணக்கின்ற மலருக்கு வண்டு! இனிக்கின்ற வெல்லத்திற்கு எறும்பு! பழுக்கின்ற பழத்திற்கு வௌவால்! துடிக்கின்ற எனக்கு யார்? வினாவிற்கு விடை தேடினாள் அவள். விடையாகத் தோன்றி விழிகளுக்கு விருந்தாகி நின்றான் அவன்.

பறிக்கவேண்டிய பூக்களைப் பறிக்காமல் மறந்தாள்: பாவை அவனைப் பார்த்தபடி இருந்தாள். தோழியும் அருகில் இல்லை. 'என்னடி இதுதொல்லை! ஏன்? என்னை இப்படி உற்று உற்றுப் பார்க்கிறான்?' சால் மிதிக்கும் மண்ணில் கட்டை விரல் நகம் கன்னா பின்னாக் கோலம் போட்டது. கண்களும் நில ஆராச்சி நடத்தின, தலையோ தானாகக் குனிந்து கொண்டது. மனமோ கேள்வி கேட்டது நிமிர்ந்து பார்த்தாள்; நிமிர்ந்த நேரத்தில் விரும்பிப் பார்த்தவன் திரும்பி நடந்துகொண்டிருந்தான். இருந்த எதையோ இழந்துவிட்டதைப்போன்ற உணர்வு அவளுக்கு. ஆமாம்! இழந்துவிட்டது உண்மைதான்! இழந்துவிட்டது வேறொன்றையுமல்ல அவளுடைய இதயத்தை!

இது முதல் நாள் சந்திப்பு. இரவில் அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை; ஏக்கம் தணியவில்லை. ஒரு நாள் செத்து மறுநாள் பிறக்கிறது. மறுநாள்—அதற்கு மறுநாள். ஒவ்வொரு நாளும் அவளுக்கு வெறும் நாளல்ல; திருநாள்! ஏன் தெரியுமா? அவன் வந்தான்; பார்த்தான்; சிரித்தான், சென்றான். எத்தனை நாளைக்கு இந்த ஊமை நாடகம்? இருப்பதைக் கேட்டால் இல்லையென்றா சொல்லி விடுவேன்?' வெளியிலே சொல்லமுடியாமல் வெட்கம் தடுத்தது. அவள் பொல்லாத உள்ளமோ இல்லாத எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணித் துடித்தது,

தங்கக் குழம்பில் செங்கதிர்ப் பழம் மிதக்கும் காலை! பூத்துச் சிரித்தது சோலை! பூப்பறிக்கப் புறப்பட்டாள். அதுதான் அவள் வேலை! அங்கே வந்து நின்றான் அந்தக் கட்டிளங்காளை; சிரித்தான்; பதிலுக்குச் சிரித்தாள். கண்களைச் சிமிட்டி ஏதோ கேட்டான்; கண்களை அகலவிரித்து என்னவோ சொன்னாள். நாணம் பிறந்தது அவளுக்கு! அச்சம் பிறந்தது அவனுக்கு!

"பூக்களைக் கொய்து தரட்டுமா? நானும் உன் பின்னால் வரட்டுமா?"

வாய்திறந்து கேட்டான். அவளோ வாயைத் திறக்கவில்லை, வா என்று சொல்லாமல் சொன்னாள் தலையசைவின்மூலம். பூவைப்பறித்துச் சேர்த்தான்; அந்தப் பூவையை அடிக்கடிப் பார்த்தான். அவள் ஏக்கத்தைத் தீர்த்தான்; இதயத்தை ஈர்த்தான்.

'பூவைத் தலையில் வைக்கட்டுமா?'

கேள்விக்கு விடையாக அவள் தலைதான் அசைந்தது. இதுபோதும். தலையே இதற்காகத்தான் இருக்கிறதோ? பூவைத் தலையிலே வைப்பதற்குக் கையைத் தோளிலே வைப்பானேன்?'

தொட்ட இடம் சிலிர்த்தது. அந்தத் தோகையின் மனம் குளிர்ந்தது. அவனை அவராக்கி என்ன என்பதை என்னங்க ஆக்கி ஏன் என்பதை ஏங்க ஆக்கி ஏங்கிக் கிடந்தவளின் ஏக்கநிலை போக்கிற்றுப் பழக்கம், வருவது வழக்கமாகிவிட்டது. முத்தம் தருவது வாடிக்கை ஆகிவிட்டது. பேச்செல்லாம் வேடிக்கை—விளையாட்டு! இந்த விளையாட்டு அவளுக்குப் புதிய விளையாட்டு! சுகம் புரிந்து விட்டது! சொந்தம் தெரிந்துவிட்டது! அவள் அவனுக்கு! அவன் அவளுக்கு! சும்மா இருக்க முடியுமா?

சும்மா இருக்குமா ஊரும்? கண்ட கண்ட நாக்கெல்லாம் கண்வைத்து மூக்குவைத்துக் கதையளக்கத் தொடங்கிற்று! ஒருவருக்கும் தெரியாமல் ஆண் பெண் இருவருக்கு மட்டுமே தெரிந்திருக்கும் இந்த உறவுத் திருவிளையாடல் பலருக்கும் தெரிந்து பலவிதமான பேச்சு எழுகிறதே இதற்கு இலக்கிய வார்த்தை அலர். அவர்களைப்பற்றி அலர் எழுந்தது.

வயிற்றெரிச்சல் படைத்த பிறரின் வம்பளப்புக்குப் பயந்து காரியத்தை நிறுத்தமுடியுமா?

(தொடர்ச்சி 4-ஆம் பக்கம் பார்க்க)

# 'குமுதத்தின் குருட்டுத்தனம்'

"சாதுப் புலவன்"

சமுதாயத்தைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கும் பணியில் முன்னணியில் நிற்கும் குருட்டுக் 'குமுதம்'...புரட்டு வாதங்களால் புழுதி வாரித் தூற்றுவதோடு மட்டுமல்ல தான் கூறுவதுதான் சிறந்த தத்துவங்கள் எனக் கூறிக்கொண்டு சதி பல்லக்குச் சவாரி செய்கின்றது.

தாழ்த்தப்பட்டு, வீழ்த்தப்பட்டு, தலை தாழ்ந்து இருட்டறையில் பூட்டப்பட்டுக் கிடந்த தமிழ்ச்சாதி இன்று தலைநிமிர்ந்து தன்மானத்துடன் உலவுகின்றதென்றால் யாரால்?

மேட்டுக் குடியினருக்கும் நன்றி மறந்திட்ட நச்சு மனம் கொண்டோர்க்கும் இது புரியாது. புரிந்தாலும் காட்டிக் கொள்வது கிடையாது.

தமிழர்தம் தந்தை!, தன்மானச் சிங்கம்! எங்கள் பெரியார் வீழ்ந்ததும்...தமிழ் நாடே பூமியதிர்ச்சியுற்றதுபோல் அலமர்ந்து கிடந்ததே! நல்ல நாவு படைத்தோரெல்லாம் வாழ்ந்து மடிந்திட்ட பெரியாரை வாழ்க! வாழ்கவென வாழ்த்தி நின்றாரே!...

வாழ்த்திட மனமில்லாத சடங்கள் வாலைச் சுருட்டிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு...கோணல் புத்தியைப் பேனாவில் அடைத்து, கிறுக்கல்களை தலையங்கமாக்கிவிட முனைந்து விட்டதென்றால்!... தமிழகமே! தமிழகமே! இன்னும் ஆயிரம் பெரியார்கள் தோன்றவேண்டும் இத்தலை கனத்தவர்களின் கொட்டம் அடக்க என்று கூறுவதை விட நான் என்ன கூறிட முடியும்?

தமிழர்களாகிய நாம் இதனை அடையாளம் கண்டுகொண்டு நாம் தமிழர் என்கின்ற எண்ணம் கொண்டு விழிப்புற்றால்தான் முடியும்?!

"பொய் சொல்லாதே. பெரியவர்களிடம் மரியாதை காட்டு. சுயநலக்காரனை வாழாதே, ஒழுக்கமும் பண்பும் மனிதனுக்கு இரு கண்கள், என்று அவர் முதியவருக்குரிய வகையில் பிரசாரம் செய்யவில்லையே?"—அதை எண்ணி வருந்தினார்கள்...... குமுதம் குருட்டுத்தனமாய் இவ்வாறு அழுதுவடிகிறது. யாருக்கு யார் விமர்சனம் செய்வது!

சாக்கடையில் உலவும் புழுக்கள் சந்தனக் கட்டைக்கு விலை பேசுகின்றன...ஐயோ தமிழகமே என்று தலையில் அடித்துக்கொண்டு..."உன்னுடைய கோணங்கி ஏடுகளை தமிழ் மகன் கையில் வைத்துக் கொண்டிருக்கின்றானே" என்று அழுகின்றேன்—

பாலுணர்ச்சியைச் சரக்காக்கி பிஞ்சு உள்ளங்களை கெடுத்து வயிறு வளர்க்கும் நீ...ஒழுக்கத்தையும் பண்பையும் பற்றி வருந்துகின்றாயே...சைத்தானே நீ வேதம் ஓதிக் கொண்டிரு...தமிழன் இளித்தவாயனாய் இருக்கும்வரை.

உள்ளத்தில் பட்ட உண்மைகளை அப்பட்டமாகக் கூறி, தன்னிலும் வயது குறைந்தவர்க்கும் மரியாதை காட்டி, அரை நூற்றாண்டு தொண்டாற்றிய சுயமரியாதைச் சுடரை...

தட்மானமுடைய தமிழர் தந்தையாக ஏற்றுக் கொண்டனர்......நீ......ஏற்றுக் கொள்ளாதது...... இன்னும் விமர்சனம் செய்து...தமிழினத்தின் தலைமகன் நிறுவிய இந்த இதழை இழிவுபடுத்த விரும்பவில்லை.

துடிக்கின்ற இதயங்களின் குமுறல்கள்! தமிழ் மக்களே! தந்தையை இழந்த வேதனையால் விழிகள் நீரைச் சிந்தும் இவ்வேளையில் வேல்கொண்டு விலாப்புறமாகத் தாக்குகின்றான் ... வழிகாட்டும் தந்தையில்லை! விழிநீரைத் துடைத்துக் கொள்! வீணர்தம் விபரீதச் செயல் களைய வீறு கொள்வீர்! தியாகச் செம்மலே! தன்மானச் சிங்கமே! உனது பணி வீண்போகாது.

---

நீண்ட நெடுநாட்களாக தேசிய இயக்கத்தில் தொண்டாற்றியவரும், சிறந்த வழக்கறிஞரும் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் நெருங்கிய நட்புகொண்டிருந்தவரும்-சட்டப் பேரவையில் எதிர்க் கட்சித் துணைத் தலைவருமாக இருந்து அண்மையில் கழகத்தில் சேர்ந்து தீவிரமாகப் பணியாற்றி வந்த வழக்கறிஞர் **கே. விநாயகம்** அவர்களை 8—1—74 அன்று இயற்கை தன்பால் ஈர்த்துக்கொண்டது.

அவருடைய மறைவு நாட்டுக்குப் பேரிழப்பாகும்.

அவர் மறைவால் துயருறும் குடும்பத்தினர்க்கும் உறவினர்கட்கும், நண்பர்கட்கும் நமது ஆறுதல் மொழிகளை உரித்தாக்குகின்றோம்.

--ஆசிரியர்.

"காஞ்சி"

காணல்— பேசல் — காதலித்தல் — மணம் புரிதல் வாலிப வயதினருக்குக் காலம் அமைத்துத்தரும் நீண்டகால நிகழ்ச்சி நிரல் இது. இதிலே ஏன் மாற்றம்? எதற்காக ஏமாற்றம்?

அவர்களுக்கு முன்பு இடம் சோலை! இப்போது தினைப்புனம்! இடம் மாறுமே தவிர மனம் மாறுமா? யாருக்காகக் காதலிக்கிறார்கள்? ஊருக்காகவா? தங்களுக்காக! இதிலே ஊருக்கு என்ன உரிமை? வாயைத் திறந்து அலறுகிறது!—உளறுகிறது!

நாள்குறித்து நாழிகை குறித்து நாங்களாக அறிவிக்க இருப்பதை நீங்களாகத் தெரிந்துகொண்டீர்களே! ஊர்மக்களே! இதுவும் நல்லதற்குத்தான்! இப்படி நினைத்தது தலைவியின் மனம். இருந்தாலும் அவள் இதயம் எரிந்தது, பேசினாலும் பரவாயில்லை! சிரிக்கிறார்களே சிரிப்பு! எதற்காகச் சிரிப்பது? இதில் என்ன இருக்கிறது சிரிப்பதற்கு?

ஊர் சிரித்தாலும் உறவினர் சிரித்தாலும் வேறுயார் சிரித்தாலும் பொறுத்துக்கொள்ளலாம். ஒட்டி உறவாடி உள்ளத்தோடு உள்ளமாக ஒன்று பட்டுவிட்ட இந்தத் தோழி சிரிக்கிறாளே—அதுவும் எங்கோ மூலையிலே அல்ல; என் எதிரில் நான் காணுகிற விதத்தில் சிரிக்கிறாள். என்னை எள்ளி நகையாடுகிறாள். என் எதிரில் துள்ளி விளையாடுகிறாள்!

'என்னடி சிரிப்பு? என்ன அப்படிக் காணாததைக் கண்டுவிட்டாய்? 'தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்' நான்பட்ட பாட்டை இவள் பட்டால் சிரிப்பாளா? விவரம் புரியாதவள்! விஷயம் தெரியாதவள்! யாருக்கோ சொல்லுகிற மாதிரி தோழியை ஒருதாக்குத் தாக்குகிறாள் தலைவி. இந்தக் காட்சியைப் படமாக்கிக் குறளாக்கித் தருகிறார் வள்ளுவர். அந்தக் குறள் இதோ:—

"யாம்கண்ணிற் காண நகுப! அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு"

அதிசய மனிதர், தொழில்-மேதை விஞ்ஞானி என அறிவுலகம் போற்றிவந்த திரு. **ஜி. டி. நாயுடு** அவர்கள் 4—1—1974 அன்று தனது 81 வயதில் இயற்கை எய்தினார். அன்னாருடைய குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.
"காஞ்சி"

# "வாரியிறைக்காதே சேற்றை வண்டமிழ்க் கோமேலே"

## (கரு. சின்னத்தம்பி)

தமிழ்பழித்தே இந்நாட்டில் தன்பூணூல் தொப்பை
தடங்கலின்றிக் கழுவிவரும் தறுதலையாம்
ஒருவன்
சிமிழ்க்கின்ற இதழ்விரித்துச் சிரிக்கும்பூக் காடாம்
செந்தமிழின் நற்பொருளைத் தேன்மொழியை
நீக்கி
உமிழ்கின்ற பொருளனைய கழிவெடுத்தே ஓங்கும்
உயிர்த்தமிழைத் தீய்க்கின்ற நூலெடுக்கும்
புல்லன்
தமிழ்க்கதிராம் அண்ணாவின் தரமறியா தின்று
தான்தோன்றித் தனமாகத் தந்திட்டான்
ஆய்வு!


வியனுலகு போற்றுமெங்கள் வித்தகனும் அண்ணா
மேன்மையிலாப் பார்ப்புழுவை வேகவைத்த
வெய்யோன்
கயமலராம் தாமரைபோற் சேற்றினின்றும் நீங்கிக்
காலவெள்ளம் சகதிநீங்கிக் கனிந்ததமிழ்ப்
பண்ணை
உயரவழி காட்டிவந்த ஒளிவிளக்காம் அண்ணா
ஒப்பரிய எங்குலத்தின் ஓங்குபுகழ் வேந்தைச்
செயகாந்தன் எனுமிழிஞன் சிந்தைதீய் கீழோன்
சீர்கெட்ட முறையிலாய்வைச் செப்பிவிட்டான்
அந்தோ!

'ஆரியத்தின் மாயை' தனை ஆய்வுசெய்த தாலோ!
அவர்வஞ்சம் தனைவிளக்கும் 'கலிங்கராணி'
யாலோ!
சூரியவாள் போற்பார்ப்பின் நஞ்சழித்த தாலோ!
'குமரிக்கோட் டம்'சமைத்தார்; கொழுப்பரிந்த
தாலோ!
நேரியவான் பொருளெல்லாம் நீளுகும் போக்கை
நேர்த்திமிக்க 'பணத்தோட்டம்' நீளவிட்ட
தாலோ!
வாரியிறைத்தான் சேற்றை வண்டமிழ்க்கோ மேலே
வக்கில்லா திங்குவந்து வாழும்செய காந்தன்!

ஆய்வென்ற பெயராலே ஆழந்தெரி யாமல்
அளக்காதே காலைவிட்டு ஆரியப்பாழ் நஞ்சே!
சாயவில்லை கொத்தாகத் தமிழினத்தின் எழுச்சி
சடசடெனச் சாய்ந்திடுவீர் தமிழ்ப்படையின்
முன்னே
தாய்பழித்தா லும்தமிழைத் தான்பொறுக்க
லாற்றாத்
தமிழ்அரிமாக் கூட்டமிங்கே இல்லையென
எண்ணி
வாய்போன மனம்போன படியெல்லாம் தாக்கி
வரிப்புலியை இடராதே தூங்குகின்ற தென்றே!

சென்ற இதழ் தொடர்ச்சி

# தம்பிக்கு மடல்



திட்டங்களுக்குத் தேவைப்படும் பொருள் குவிய, வரிகொடுத்துக் கொடுத்து ஏழை எளியோர்கள். மேலும் இளைத்துப் போய், களைத்துப்போய் இருப்பது தெரிகிறது; திட்டத்தால் பெற்ற பலன் வேறு என்ன, எங்கே இருக்கிறது என்று காட்டக் கூடக் கூச்சப்படுகிறார்கள் காங்கிரசுடன் பெரிய தலைவர்கள்.

ஆராய்ச்சி நடத்துகிறார்கள், திட்டம் ஏன் எதிர்பார்த்த பலனைச் சமூகத்துக்குத் தரவில்லை என்று.

திட்டம் சரியாகத் தீட்டப்படவில்லை.

திட்டம் நடைமுறைக்கு ஏற்றதாகத் தீட்டப்படவில்லை.

திட்டம் சரியாகவே தீட்டப்பட்டது, செயல் படுத்துவதிலேதான் தவறுகள் நேரிட்டு விட்டன.

செயல்முறை சரியாக வகுக்கப்படவில்லை.

செயல்படுவதற்குத் தக்கவர்களை அமர்த்தவில்லை.

செயல் படுத்தியவர்களுக்குப் போதிய அக்கறை இல்லை.

திட்டத்தின் உட்பொருளைச் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை,

திட்டத்திற்கு மக்களின் ஒத்துழைப்பு முழு அளவில் கிடைக்கவில்லை.

இப்படி ஆளாளுக்கு ஒரு குட்டு குட்டியபடி உள்ளனர். குட்டுபவர்கள் எல்லோருமே காங்கிரஸ் எதிர்ப்பாளர் என்று கூறிவிட முடியாது. காங்கிரஸ்காரர்களிலேயே பலர், குறை காணுகின்றனர்.

எல்லோரும் ஒரு சேர இன்று ஒப்புக்கொண்டிருப்பது, திட்டங்கள் எதிர்பார்த்த பலனை சமூகத்துக்குத்தரவில்லை என்பது.

ஆகவே, எந்தத் திட்டங்களைத் தமது சாதனையிலே சிகரம் போன்றது என்று இவர்கள் கூறிக்கொண்டு வந்தார்களோ, அந்தத் திட்டங்களே தோல்வி அடைந்து விட்டன என்பது மறுக்கப்பட முடியாத ஆனால் பயங்கரமான உண்மையாகி விட்டது. இந்தத் திட்டங்களுக்காகச் செலவாகி இருக்கும் பணத்தின் அளவு, எவருடைய தலையையும் சுற்றச் செய்துவிடும்; அத்தனைப் பெரிய தொகை.

"விடமாட்டோம் இந்தியாவை" என்று வெள்ளையர் வீம்பு பேசிக்கொண்டிருந்த நாட்களில் டில்லிப் பாராளுமன்றத்தில் வீற்றிருந்த கோவிந்த வல்லப பந்த் கோபாவேசமாக ஒருமுறை சுயராஜ்ய திட்டம் பற்றிப் பேசியபோது, வெள்ளையர் ஒருவர் குறும்புத்தனமாகக் குறுக்கிட்டு,

சுயராஜ்யம் கிடைத்ததும் என்ன செய்யப்போகிறீர்கள்?

என்று கேட்டபோது, பந்த் அவர்கள் பதிலளித்தார், சுடச்சுட, அவரால் அன்று, எந்த அளவுக்குச் சொல்ல முடிந்தது?

சுயராஜ்யம் கிடைத்ததும் நாட்டை வளப்படுத்த திட்டம் தீட்டுவோம். நூறு கோடி ரூபாய் அளவு செலவிட்டுத் திட்டம் நிறைவேற்றுவோம்.

என்று கூறினார். கவனித்தனையா தம்பி! 100 கோடி அது அன்று பிரம்மாண்டமான தொகை!!

ஆனால் காங்கிரஸ் அரசு இந்த ஐந்தாண்டுத் திட்டங்களுக்காகச் செலவிட்டிருக்கும் தொகை, 20,000 கோடி ரூபாய்! பண்டித பந்தினால் நினைத்துப் பார்த்திருக்கக்கூட முடியாத தொகை! இவ்வளவு செலவான பிறகும், இன்று நாட்டிலே இல்லாமை, போதாமை! அமெரிக்கா பறக்கிறார் அமைச்சர் சுப்பிரமணியம்! உணவுக்காக!! சௌத்ரி, ஐரோப்பா பயணமாவார், கடன் கேட்க! மேத்தா, ரஷியா செல்லக்கூடும்! இந்திரா அம்மையார், உலகசமாதானம் உண்டாக்க யூகோ செல்லக்கூடும்.

பாவம், அவர்களால் இங்கு இருக்க முடியவில்லை.

காது குடையும் கூச்சல்! கண்ணைக் கெடுக்கும் காட்சி! மனதை மருட்டும் செய்திகள்! நிம்மதி இல்லை! நிலைகொள்ளவில்லை.

பாரிசோ, மாஸ்கோவோ, நியூயார்க்கோ, இலண்டனோ எங்காவது சென்று சிறிதளவு நிம்மதியாவது பெறலாம் என்று எண்ணுகிறார்கள். துல்லியமான மேக மண்டலங்களுக்குமேலே விமானம் செல்லும்போது, ஆர்ப்பரிப்பும், பேரணியும் கடை அடைப்பும் கலவரமும் இல்லாதநிலை காண்கின்றனர்! ஒரு நிம்மதி!

## ஓட்டாண்டியாக்கிவிட்டு!

இலஞ்சக் குற்றச்சாட்டுகள் கூறிடுவோர், குறுக்குக் கேள்விகள் பூட்டிடுவோர், ஊழல்களை அம்பலப்படுத்துவோர், அமீர் சந்த் பியாரிலால் போன்றவர்கள் பற்றிக் கிளறிவிடுவோர் இல்லாத இடம்; ஒரு மகிழ்ச்சி!

இந்த விதத்தில் அவர்களும் பாவம், தங்கள் மனதிலே குமுறிக்கொண்டிருக்கும் கவலையை மறந்துவிட முயற்சிக்கிறார்கள்.

20 ஆயிரம் கோடி ரூபாய் செலவிட்டு, தோல்விகண்ட கட்சி, கூனிக் குறுகிப்போக வேண்டியது முறையாக இருக்க, இந்தத் திட்டங்களின் கர்த்தாக்களாகிய எமக்கே ஓட்டுகள்!—என்று பாத்யதை வேறு கொண்டாடுகிறார்கள்!!

தெளிவும் ஜனநாயக உணர்வும் இருக்க வேண்டிய அளவிலும் வேகத்திலும் இந்த நாட்டில் இருந்திடுமானால், 20 ஆயிரம் கோடி ரூபாயைப் பாழாக்கினதற்காகக் காங்கிரஸ் கட்சியைக் கூண்டிலே நிற்கவைத்து விசாரணை நடத்தி இருப்பார்கள்!!

இன்றோ, இந்த ஆட்சியின் போக்கை எதிர்க்கத் துணிபவர்களை, காரணம் கூடக் காட்டாமல் சிறையில் தள்ளிவைக்க, தடுப்புக் காவல் சட்டத்தை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீடிப்பது என்று பாராளுமன்றத்தில், பலமான எதிர்ப்பைத் துச்சமென்றுத் தள்ளிவிட்டு நிறைவேற்றி வைத்துக்கொண்டு விட்டார்கள்.

உரிமைகள் குலைக்கப்படுகின்றன, இது நாம் ஏற்றுக்கொண்டுள்ள இந்திய அரசியல் சட்டத்திற்கே ஒவ்வாதது என்று கண்டிக்காத மேதைகள் இல்லை; சட்ட நிபுணர்கள் இல்லை. இன்னமும் நெருக்கடி நிலைமையை நீடித்துக் கொண்டிருப்பது அறமாகாது; அதன் பெயரால் பாதுகாப்புச் சட்டத்தை ஏதாவது ஒரு வடிவத்தில் நீட்டிக்கொண்டு போவது அடாத செயலாகும் என்று, நீதி மன்றங்களில் கீர்த்திமிக்க நிலைபெற்றிருந்தவர்களெல்லாம் எடுத்துக் கூறி விட்டனர். சர்வாதிகார நாடுகளில் தவிர வேறு எங்கும் இப்படிப்பட்ட ஆள் தூக்கிச் சட்டங்கள்—நாக்கறுப்புச் சட்டங்கள் இல்லையே என்று கூறிக் கண்டிக்கின்றனர் சான்றோர் பலர்.

இந்தியாவின் முன்னாள் சட்ட அமைச்சர் A. K. சென் அவர்களே இந்தப் போக்கைக் கண்டித்துப் பேசுகிறார்.

ஆனால், தம்மைவிட அறிவிலும் ஆற்றலிலும் மிக்கவர் உளர் என்ற நினைப்புத் தடித்துப்போன நிலையில், தடுப்புக்காவல் சட்டம்கூட தேவைதான் என்று காங்கிரசார் வாதாடுகின்றனர்.

தடுப்புக்காவல் சட்டம், ஒப்புக்கொள்ளப்பட்ட சாதாரண சட்ட முறையாகி விட்டது என்றே பேசுகிறார், உள்துறை அமைச்சர்-புதியவர்—சவான்! மனித உரிமைகள் அவ்வளவு கேவலப்படுத்தப்பட்டு விடப்பட்டுள்ளன.

உணவு போதுமான அளவு இல்லை.

உரிமைகள் பறிக்கப்படுகின்றன,

சாந்தி இல்லை, சமாதானம் இல்லை.

என்றாலும், ஓட்டு இருக்கிறதல்லவா. அதை எமக்குக் கொடுத்திடுக! என்று கேட்கிறார்கள்.

ஓட்டாண்டியாக்கிவிட்டு ஓட்டும் கேட்கிறார்கள்.

புதுடில்லியில், 'ஜனநாயக நிலை' பற்றிய கருத்தரங்கு ஒன்றில் பேசிய மேனாட்டு அரசியல்துறைப் பேராசிரியர் ஒருவர்

"மக்கள் காங்கிரசாட்சியிடம் வெறுப்படைந்துள்ளனர்; ஆனாலும் காங்கிரசுக்கு ஓட்டுப் போடுகின்றனர். இந்த விந்தை இந்திய ஜனநாயகத்திலே காணப்படுகிறது. இது ஆராயப்படவேண்டிய பிரச்சினையாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

உள்ளபடியே தம்பி! காங்கிரசாட்சியிடம் மக்கள் கொண்டுள்ள கோபமும் கொதிப்பும், வெளிநாடுகளிலே உள்ள ஆய்வாளர்களும் அறிந்துள்ளனர். மக்களிடையே இவ்வளவு ஏமாற்றத்தையும் எரிச்சலையும் மூட்டிவிட்ட காங்கிரஸ் கட்சியை மக்கள் மீண்டும் ஆதரித்து ஆட்சியில் அமர்த்தமாட்டார்கள் என்று கருதுகிறார்கள். ஏனெனில், இங்கு காங்கிரசாட்சி செய்திருப்பது போன்ற தவறுகளிலே நூற்றிலே ஒரு பங்கு தவறு செய்திடினும் போதும், அங்கு அத்தகைய ஆட்சியை மக்கள் தாங்கிக் கொள்ளமாட்டார்கள். ஜனநாயக உணர்வு அங்கெல்லாம் அந்த அளவு இருக்கிறது.

இங்கோ ஆட்சியினிடம் மக்களுக்கு அச்சம் மூண்டுவிடுகிறது.

அக்ரமம் செய்திடினும், ஆட்சி தன்னிடம் சிக்கிக்கொண்டுள்ள வலிவினைக் கொண்டே, எதிர்ப்புச் சக்திகளை முறியடித்துவிடும் என்ற பீதி பிடித்தாட்டுகிறது.

இந்த அச்சத்தை, தம்பி! உன் இடைவிடாத முயற்சியின் துணைகொண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் பெரும் அளவுக்கு ஓட்டிவிட்டிருக்கிறது.

இந்த நிலைமையை நன்கு புரிந்து கொண்ட காங்கிரசார் இம்முறை 'கடைசி ஊசி' போடுவது என்பார்களே அதுபோல உள்ள பணம் அவ்வளவையும் வீசிப்பார்த்து விடுவது என்று துணிந்து விட்டுள்ளனர். பார்க்கட்டும்! பாசி பிடித்துப்போன பணமெல்லாம் வெளியே வரட்டும்! பாட்டாளியின் வயிற்றில் அடித்துச் சேர்த்து வைத்துள்ள பணமெல்லாம் வெளியே வரட்டும்! ஒன்றை ஒன்பதிற்கு விற்றுச் சேர்த்துள்ள பணமெல்லாம் வெளியே வரட்டும்! கள்ளப்பணம் கருப்புச் சந்தைப் பணம், வரிகொடுக்காமல் ஏய்த்துச் சேர்த்தப் பணம் எல்லாம் வெளியே, வரட்டும்!! ஏன் வருகிறது என்பதா மக்களுக்குத் தெரியாது; புரியாது!! மிக நன்றாகப் புரிந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பேரூர்களில் மட்டுமல்ல, சிற்றூர்களிலே எல்லாம் பார்க்கிறேன்.

என் ஆவல் திருமளவுக்கும் தோழர்களின் அன்பழைப்பை நிறைவேற்றும் அளவுக்கும் என்னால் எல்லா இடங்களுக்கும் சென்றுவர முடியவில்லையே, அதற்குப் போதுமான வலிவு இல்லையே என்றுதான் வருத்தப்படுகிறேன்.

நண்பர்கள் அடுக்கடுக்காக நிகழ்ச்சிகளைக் கூறும் போது சுரீல் என்று கோபம்கூட வந்து விடுகிறது. இப்படி 'வேலை வாங்குகிறார்களே' என்று. ஆனால் சென்று, அங்கு ஆர்வம் ததும்பும் நிலையில் ஆடவரும் பெண்டிரும், முதியோரும், இளைஞரும் திரண்டு இருந்திடக் காணும்போது எல்லாக் கஷ்டங்களும் இருக்கும் இடம் தெரியாமல் மறந்தே போய்விடுகின்றன.

இவ்வளவு பேரும் எதேச்சாதிகாரத்தை எதிர்ப்பவர்கள்.

காங்கிரசினால் மூட்டிவிடப் பட்டுவிட்ட கொடுமைகளை எதிர்ப்பவர்கள்.

காங்கிரசுக்கும் கனதனவான்களுக்கும் ஏற்பட்டுவிட்டுள்ள கூட்டுச் சதித் திட்டத்தைத் தகர்த்திடத் துடிப்பவர்கள்.

ஏழை வாழவேண்டும்; இல்லாமை ஒழிய வேண்டும்; நிம்மதி ஓங்கவேண்டும் என்ற உன்னதமான இலட்சியத்துக்காகப் போராடுபவர்கள்.

மொழி காத்திட, உரிமை காத்திட, எதனையும் இழந்திடும் துணிவு பெற்ற தூய உள்ளத்தினர்.

இவர்களை ஆசை அலைக்கழிக்கவில்லை; அச்சம் மருட்டவில்லை, ஆளவந்தவர்களின் அட்டகாசம் அடக்கிட முடியவில்லை.

ஏடு பல காட்டி இவர்களை மயக்கிட முடியவில்லை.

ஏதேதோ செய்கிறோம் என்று தித்திப்புத் தடவி இவர்களை இழுத்திட முடியவில்லை

இவர்கள் அஞ்சா நெஞ்சினர்; அறப் போர் இயல்பினர்,

இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்!

இவர்கள் பலர்! மிகப் பலர்! இவர்களை வீழ்த்திட முனைபவரோ சிலர்!

இவ்விதமான எண்ணமெல்லாம் கொள்ளுகின்றேன்; இதயத்திலே ஓர் இசையே சுரக்கிறது. அவர்களைக் காண்கிறேன்; கனிவு என்றால் என்ன என்பது விளக்கமாகிறது, அவர்களிடம் பேசுகிறேன்; பாசம் என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்கிறேன்? புதியதோர் ஆர்வம் பெறுகிறேன்.

என் உள்ளத்தில் எழுந்திடும் ஆர்வத்தின் அளவு எவ்வளவோ, அந்த அளவு என் உடலில் வலிவு இருக்கக் கூடாதா, இல்லையே என்று எண்ணி ஏக்கம் கொள்கிறேன்.

ஒவ்வொரு கூட்டமும் என்னை அந்த மக்களுடன் பிணைத்துவிடுவதை உணருகிறேன்—பாசப் பிணைப்பு அஃது என்பதால் பெருமிதம் கொள்கிறேன்.

நான் பெற்றிடும் இந்தப் பெருமிதத்தைத்தான் மற்ற பேச்சாளர்களும் பெறுவர் என்பதை எண்ணிப் பார்க்கிறேன்; மிகப் பெரியதோர் குடும்பம் நமது கழகம் என்ற இலக்கணம் மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது என்பதை உணர்ந்து மகிழ்கிறேன்,

புதுப்பாளையம்
சிறுவாளூர்
தூக்கநாய்க்கன் பாளையம்
தாசப்பகவுண்டன்புதூர்
கூடக்கரை
நம்பியூர்
பவானிசாகர்
புஞ்சைபுளியம்பட்டி
காவலிபாளையம்
உக்கரம்
சத்தியமங்களம்
கோபிசெட்டிபாளையம்
தாளக்கொம்புபுதூர்
பெருந்தலையூர்
பொத்தபாளையம்
உடையாம்பாளையம்
கெம்பநாயக்கன்பாளையம்
கோவை நகர உட்கிளைகள்
கோவை நகரம்
தாயனூர்
தோலம்பாளையம்
கெண்டேபாளையம்
காரமடை
எல்லப்பாளையம்
வரதய்யன்பாளையம்
அன்னூர்
நீலிபாளையம்
கருவலூர்
பெரிய ஆயிபாளையம்
ராக்கியாபாளையம்
அம்மா பாளையம்
அவிஞசி
சேவூர்
சாவக்கட்டுபாளையம்
திருமுருகன் பூண்டி
சிறுமுகைபுதூர்
பகத்தூர்
வடுகபாளையம்
மேட்டுப்பாளையம்
காளிங்கராயன்பாளையம்
தொட்டிபாளையம்
அத்தாணி
சவுண்டப்பூர்
பவானி
கவுந்தப்பாடி
அந்தியூர்
ஒலகடம்
ஆண்டிபாளையம்
குருவரெட்டியூர்
கந்தாம்பாளையம்
கீரனூர்
ஆலாம்பாடி
பச்சாம்பாளையம்
நாச்சிபாளையம்
புதுப்பை
எரசனம்பாளையம்
கன்னிவாடி
மூலனூர்
புளியம்பட்டி
லக்கமநாயக்கன்பட்டி
வெள்ளகோயில்

முத்தூர்
காங்கயம்
வரப்பாளையம்
தாராபுரம்
எலகாம்வலசு
கெல்லிபாளையம்
சிவன்மலை
வெள்ளவாலிபுதூர்
காமாட்சிபுரம்
கண்ணம்பாளையம்
பட்டணம்
பாப்பம்பட்டி
அப்பநாயக்கன்பட்டி
சூலூர்
வாகராயம்பாளையம்
ராசி பாளையம்
அருகம் பாளையம்
திருப்பூர்
சோமனூர்
கோம்பக்காடு
பல்லடம்
பள்ளபாளையம்
வதம்பச்சேரி
சேகம்பாளையம்
காமநாயக்கன் பாளையம்
பூலவாடி
துங்காவி
தாமரைப் பாடி
கணியூர்
சோளமாதேவி
மடத்துக் குளம்
கொழுமம்
கொமரலிங்கம்
சாமராயபட்டி
மலையாண்டி கவுண்டனூர்
கண்ணம நாயக்கனூர்
உடுமலைப்பேட்டை
தேவனூர் புதூர்
காரத்தொழுவு
வால்பாறை
வாட்டர் பால்ஸ்
கல்லூர்
பச்சைமலை
பழனியூர்
பெத்தநாயக்கன் பாளையம்
ஆனமலை
காளியாபுரம்
பழனிக் கவுண்டனூர்
பொள்ளாச்சி-பல வட்டங்கள்
கோடம்பட்டி
புளியம்பட்டி
ராசக்கா பாளையம்
கொப்பம் புதூர்
வடசித்தூர்
வெள்ளே கவுண்டன் புதூர்
அரசன் பாளையம்
கிணத்துக் கடவு
சேரி பாளையம்
மொடக் குறிச்சி
அரச்சலூர்

| | |
|---|---|
| மேலப்பாளையம் | குன்னத்தூர் |
| புதுப்பாளையம் | ஊத்துக்குளி |
| குமாரபுரி | பெருமாநல்லூர் |
| ஈங்கூர் | பெங்கால்மட்டம் |
| வீரப்பன் சத்திரம் | மஞ்சூர் |
| பெரிய அக்ரகாரம் | குன்னூர் |
| ஈரோடு | உதகமண்டலம் |

தம்பி! புஞ்சை புளியம்பட்டி தோழர் சாமிநாதன் அனுப்பிய கடிதத்தின் மூலம், நான் கோவை மாவட்ட சுற்றுப் பயணத்தின்போது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் சென்றிருந்த ஊர்களின் பட்டியலைத் தொகுத்துத் தந்திருக்கிறேன்.

இத்தனை ஊர்களிலும்—இவைகளில் பல, பாளையங்கள்—நமது கழகத்திடம் பற்று நிரம்பக் கொண்டவர் பல்லாயிரவர் இருந்திடக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டேன். அவர்கள் ஆர்வத்துடன் கூறுகின்றனர். "அண்ணா! இந்த முறை வெற்றி நமக்குத்தான்!! கவலைப்படாதீர்கள்," என்று.

அவர்களுக்குப் புள்ளிவிவரம் போதுமான அளவு தெரியாது. மேற்கோள்கள் அவர்கட்கு மனப்பாடமாகவில்லை. வரலாற்றுச் சான்றுகளை அவர்கள் தேடி அலைந்து கொண்டில்லை.

> கண் இருக்கிறது, காண்கின்றனர்;
> காங்கிரசாட்சியால் நாடு கொண்டுவிட்ட
> அலங்கோலத்தை.
> காது இருக்கிறது, விம்மல் குமுறல்,
> பெருமூச்சு, கதறல் விழுகிறது.
> அறிவு இருக்கிறது; தூய்மை கெடாத
> அறிவு; சிந்திக்கிறார்கள்! தெளிவுபிறக்கிறது.
> வயலைப் பார்க்கிறார்கள் வயிற்றையும்
> பார்த்துக் கொள்கிறார்கள்!
> வரட்டும்! வரட்டும் இந்த முறை
> ஓட்டுக்கு—என்று மெல்லிய குரலில் ஆனால்
> உறுதி நிரம்பிய தன்மையில் கூறுகிறார்கள்.

இவர்களிடம் காங்கிரஸ் தலைவர்கள் சென்று, நாங்கள் இப்போது நாலாவது ஐந்தாண்டுத் திட்டம் போட்டிருக்கிறோம் என்று சொன்ன உடனே; பூரித்துப்போய் விடுவார்களோ! ஏமாளித்தனமான எண்ணம்!

> திட்டம்தானே ஐயா! ஐந்தாண்டுத்
> திட்டம்!! தெரியுமே! பார்த்தோமே!!
> அனுபவித்துக் கொண்டுதானே இருக்
> கிறோம் திட்டங்களை!!

—என்றுதான் சலிப்புடன் பேசுவார்கள். அவர்கள் திட்டங்களுக்கு விரோதிகள் அல்ல! ஆனால் திட்டங்கள், ஏழைக்குப் பயன்படவில்லையே என்ற வேதனையால் தவிக்கின்றார்கள்.

அவர்களின் சார்பிலே பணியாற்றிடும் ஆச்சார்ய வினோபா பாவே, அவ்வப்போது காங்கிரசாட்சியினால் விளைந்துள்ள கேடுபாடுகளை விளக்கிக்கொண்டு வருகிறார்.

> அவருக்கும் பூஜை நடத்தக்கூடக்
> காங்கிரஸ் தலைவர்கள் முன்வருகிறார்கள்;
> ஆனால் அவருடைய அறிவுரையின்படி நடந்
> திடமட்டும் மறுக்கிறார்கள். முடியவில்லை!!

தம்பி, இந்த ஐந்தாண்டுத் திட்டம்பற்றி வினோபா மிகக் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார். இதனை 'குருட்டுத் திட்டம்' என்றே கூறுகிறார். நிலைமையைத் தெரிந்துகொள்ளாதவர்கள் தீட்டிடு திட்டம். அவர்கள் மெத்தப் படித்தவர்களாக இருக்கலாம், ஆனால் ஏழைகளை அவர்கள் கண்டதில்லை!!—என்று சாடுகிறார்.

> நிலைமை மிகவும் சீர்கேடடைந்து வருகிறது.
> இதை தில்லியிலுள்ள நமது தலைவர்கள்
> பார்க்காமல் இல்லை. அவர்கள் அவற்றை
> நன்கு அறிவார்கள். ஆனால் அவற்றிற்கு
> மாற்று என்ன என்பதைக் கண்டறிய திற
> னில்லாதவர்கள் என்றே நான் வருத்தத்
> துடன் கூறவேண்டியிருக்கிறது.
> திட்டத்தை இயற்றியவர்கள் மிகப்
> பெரியவர்கள், அவர்களில் சிந்தனையாளர்
> கள், பொருளாதார சமூக சாஸ்திர நிபு
> ணர்கள் அனைவரும் இருக்கிறார்கள், ஆனால்
> அனைவருமே இந்தத் தேசத்தின் ஏழையை
> கண்டறியாதவர்கள்.
> எல்லோரும் பட்டணத்தையும் பட்ட
> ணத்தின் பகட்டான வாழ்க்கையையும்
> பார்த்துப் பழக்கப்பட்டவர்கள். முதுகோடு
> முதுகாக ஒட்டிக்கிடக்கும் விவசாயியின்
> வயிற்றையோ மற்ற ஏழைக் கிராம மக்க
> ளின் நிலைமையையோ அவர்கள் கண்ட
> றிந்ததில்லை என்றே கூறவேண்டும்.
> அதைத்தான் திட்டமும் பிரதிபலிக்கிறது.
> பதவி பெறும் நோக்குடன் காங்கிரசைக்
> குறைகூறித் திரிகிறார் என்று வினோபாவே
> யைக் கூறிடும் துணிவு வராது என்று நம்பு
> கிறேன். இதுவரையில் அத்தகைய
> துணிவு வரவில்லை!

அவருடைய கண்டனம், மனம் வெதும்பி வெளிவந்திருக்கிறது, இந்த இலட்சணத்தில் திட்டத்தைத் தீட்டியும் நடத்தியும் வந்திருக்கும் காங்கிரசு, மீண்டும் ஆதரவு கேட்கிறதே, என்ன நியாயம்?

நியாயமற்றதுதான், ஆனால் நிதி இருக்கிறதே நிரம்ப! பணம் இருக்கிறதே, கோடிகோடியாக!! பணம் பாதாளம் வரை பாயுமே!—என்கிறார்கள்.

தம்பி! நாடு என்ன பதில் அளிக்கவேண்டும்? என்ன பதில் கிடைக்கப்போகிறது என்பது, உன் உழைப்பைப் பொறுத்து இருக்கிறது.

இடையே உள்ள நாட்கள் அதிகமில்லை; அவை வேகமாகவும் உருண்டோடிக்கொண்டுள்ளன. எனவே உன் நேரம் முழுவதும், நினைப்பு முழுவதும், அறிவாற்றல் அவ்வளவும், இந்த ஒரே காரியத்துக்கு என்ற உறுதியுடன் இன்றே பணியாற்றக் கிளம்பிடுவாயேல், தம்பி! வெற்றி நிச்சயம். நாடு வாழ்ந்திடும்; வாழ்த்திடும்! உன்னால் மட்டுமே இந்த வெற்றியைப் பெற்றுத்தந்திட முடியும்; ஆனால் ஒரே ஒரு நிபந்தனை; மற்ற எதற்கும் இரண்டாவது இடமே-முதல் இடம், ஜனநாயகப் பாதுகாப்புக்கே—கழக வெற்றிக்காகப் பணியாற்றுவதற்கே— என்ற உறுதியுடன் தொண்டாற்ற வேண்டும். முடியுமா? செய்வாயா?

கேள்வி கேட்கிறேன் பார், கேள்வி-செய்வாயா? என்று. இப்போதே அதைத்தானே செய்துகொண்டிருக்கிறாய்!! அந்த மகிழ்ச்சி தந்திடும் வலிவுதானே என்னையும் வேலை செய்திடச் செய்கிறது.

அண்ணன்,

அண்ணாதுரை

# ‘குட்டிக் கதைகள் ஒரு நூறு!’

## 20. எதிர்ப்பேன்! அதனால் குடிப்பேன்

அது ஒரு கள்ளுக்கடை.

அங்கு ஒருவன் அளவுக்கு மீறிக் குடித்துக் கொண்டிருந்தான்.

அவன்,

மதுவை எதிர்ப்பவன்;

குடிப்பவனெல்லாம் குடியைக் கெடுப்பவன் என்று அவன் முழங்காத மேடையில்லை.

அவன் குடிக்கலாமா?

அவன்தான் குடித்தான்!

அவனைப் பொருத்தவரைத் தொட்டியில் சாராயத்தை ஊற்றி, நீச்சலடிக்கவும் தயாராக இருந்தான்.

“என்ன நண்பரே, மதுவிலக்கின் மகத்துவம் பற்றி ஊருக்கு உபதேசம்! இங்கு இப்படியா? கால் நோக மறியல் செய்துவிட்டுக், களைப்பு போகக் கள்ளுக்கடைக்கு வருகையா?”

குடித்துக் கொண்டிருந்தவனைக் குடிக்க வந்தவன் கேட்டான்.

அந்த மயக்கத்திலும் அவன் தெளிவோடு சொன்னான் இப்படி:

“குடித்தால் இப்படியிப்படிக் கெடுவீர்கள் என்று சொல்லிப் பார்த்தேன்; குடியின் தீமையைப் பேசிப்பேசி அலுத்துப் போனேன். பயனில்லை! எவனும் திருந்தவில்லை.

எனவே, இப்படித்தான் கெடுவீர்கள் என்று செய்தே காட்டி விடத்துணிந்து விட்டேன்.

தீமைகளைச் சொல்லி புரியவைப்பதைவிட, செய்தேகாட்டி விட்டால்...!!

எப்படி என் பதில்...!!

அப்படியா? நானும் உனக்குத் துணையாக வருகிறேன்...”

அவனும்,

மது எதிர்ப்பு மன்றத்தில் உறுப்பினன் ஆகிவிட்டான்!!

## 21. “சாமி-யார்?”

“சாமியாராகப் போகப் போகிறேன்” என்றான் ஒருவன்.

“என்ன!! இந்த சின்ன வயிதிலா சாமியாராகப் போகப் போகிறாய்?” என்றான் அடுத்தவன்.

“சின்ன வயதில் சாமியாராகப் போகாமல் கிழ வயதிலா சாமியாராகப் போவார்கள்?”

எதிர்காலச் சாமியார் ஏளனமாகக் கேட்டான்.

“அதற்கில்லை; அளவில்லாத இன்பங்களை அனுபவிக்க வேண்டிய வயதாயிற்றே என்றுதான் சொன்னேன்”

“அதனால்தானே சாமியாராகப் போகப் போகின்றேன்”

“என்ன சொல்லுகிறாய்?”

“கிழவயதில் சாமியாராகப் போனால் எல்லா இன்பங்களையும் இரட்டிப்பாக அனுபவிக்க முடியாதே என்கிறேன்”

அந்த மடையனுக்கு அப்போதும் புரியவில்லை. காரணம், அவன் ஒரு சாமியார்க்குப் பிறந்த மகன்.

## 22. ‘ய்’ யா? ‘ங்’ கா?

பெரிய மனிதர்கள் வாழும் காலனி அது.

யாரோ ஒருவரின் வீட்டைத் தேடி இரண்டு பட்டிக்காடு மனிதர்கள் காலனியைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

“நாய்கள் ஜாக்கிரதை” என்ற கொட்டை எழுத்துப் ‘போர்டை’ எடுத்துக் காட்டிப் படித்துப் பார்த்த ஒருவன் அடுத்தவனிடம்,

“நாய்கள் ஜாக்கிரதை... நாய்கள் ஜாக்கிரதைன்னு எல்லா வீட்டிலும் ‘போர்டு’ இருக்கு; ஆனா ஒரு நாயைக்கூட எங்கேயும் காணுமே” என்றான்.

அவன் சொன்னதும் உண்மைதான். அந்தக் காலனியில் ஒரு நாய்கூட இல்லை.

அடுத்தவன் சொன்னான்:-

“பெரியவங்க பொய்யாவா எழுதிவைப்பாங்க?”

## 23. கசப்பாம்கசப்பு

நான் என் நண்பனைப் பார்த்தேன்.

சற்று சோர்வாக இருந்தான்.

காரணம் கேட்டேன்.

எல்லாமே கடந்து விட்டது என்றான்.

“எல்லாமே என்றால்...?”

குறும்பாகக் கேட்டேன் நான்.

“உலகமே கடந்து விட்டான்” என்றான்.

என் கண்ணில் நீர் அரும்பு கட்டியது.

பேசிக் கொண்டே சென்ற போது வழியில் ஒரு ‘டீக்’ கடையைப் பார்த்தோம்.

உள்ளே சென்றோம்.

“இந்தாப்பா நாயர், ரெண்டு டீ போடு”

நண்பன் இடைமறித்தான்.

“எனக்கு ‘லைட்டா’ ‘டபுள்’ சக்கரை போட்டு, பிரமாதமா போடு; ‘கிளாச’ கழிவிட்டுப் போடுப்பா.”

உலகம் கசப்பாகத்தான் இருந்தது... எனக்கு!!

## 24. அனுபவம்

அவர் செய்தித்தாள்களைப் பார்ப்பதும், படிப்பதும் இல்லை.

“நாட்டில் நடந்ததையும், நடப்பதையும் தெரிந்து கொள்ளும் ஆசையே உங்களுக்குக் கிடையாதா?”

அவர் நண்பர் கேட்டார்.

“நாட்டில் நடந்ததையும், நடப்பதையும் தெரிந்து கொள்ளும் ஆசை எனக்கு உண்டுதான்”

“தினமும் ‘பேப்பர்’ படிக்காமல் எப்படி... நாட்டில் நடந்ததையும், நடப்பதையும் தெரிந்துகொள்ள முடியும்?”

“நடப்பதையும், நடந்ததையும் ‘பேப்பரைப்’ படித்தாலும்தான் தெரிந்துகொள்ள முடியாது”

“நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?”

நண்பருக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

“நாட்டில், உண்மையாகவே நடந்ததையும், நடப்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசையால்தான் நான் தினத்தாள்களையே படிப்பது இல்லை”

நண்பரின் ஐயத்தைப் போக்க முயன்றார் அவர்.

அப்போதும் நண்பர்க்கு ஒன்றும் புரியவில்லை.

காரணம்,

தமிழ் நாட்டுத் தினத்தாள்களைப் படித்துப் பழக்கப்பட்டவர் அவர்.

தினப்பத்திரிகை நடத்தி ஓய்வு பெற்றவரின் அனுபவம், சாதாரண வாசக நண்பருக்கு எப்படி புரியும்?

(புலவர். அரிமதி தென்னகன்)

தொடர் கதை :

# மெல்லிய காதல்

புலவர் தி. நா. அறிவுஒளி

'அவர் என்ன குற்றம் செய்தார்? செய்திருந்தாலும் என்ன? அறியாப்பருவந்தானே! எனக்குரியவர் அவர் அல்லரோ? என் அன்புக்காக நான் அளிக்க வேண்டிய பண்புக்காக, ஆறுதலுக்காக, வாழ்வினிமைக்காகவும் தானே அவர் என் கைப் பிடித்தார்! அவருக்காக நான் செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங்காகச் செய்ய வேண்டியதில்லையா? என் கடமையைச் செய்யாமல் உரிமையை எப்படி நான் நிலை நாட்டிக் கொள்ளமுடியும்? அவர் யாரிடத்திலோ உள்ளம் இழந்ததற்கு நான் இப்போது ஏன் அதைப் பெரிதுபடுத்த வேண்டும்? விடாப்பிடித் தன்மை வாழ்வில் கேடுகள் தரும். அவரோடு இசைந்து இணங்கி வாழ்வதுதான் நல்லது.' என எண்ணம் ஒருபால் எழும்.

ஆனால், அவளின் நேர்மையுள்ளம், பெண்மையின் வீறுள்ளம், காதல் நெகிழ்வின் கழிவிரக்கத்தைச் சிறையிலிட்டு வெல்லும்.

சிற்றுண்டியைப் புகழேந்தியின் அருகில் வைத்தாள் வெள்ளிவீதி.

"சாப்பிடுங்கள்" என மெல்லிய குரலில் அன்போடு கூறினாள்.

தலை நிமிர்ந்தான்; சிற்றுண்டியைச் சற்று நோக்கினான்; கை கழுவி வந்து அமைதியாக உண்ணலானான்.

வெள்ளிவீதியின் சொல்லை மதித்துக் கட்டுப்பட்டியங்கினான்.

அவள் பெண்மையுள்ளம் பேதுற்றுப் புலம்பியது; துன்ப இருளில் ஆறுதல் கரையைத் தேடி ஆற்றாது அல்லலுறும் புகழேந்திக்கு அன்பாலும் பரிவாலும் ஆறுதலும் அமைதியும் அளிக்கவேண்டிய வாழ்க்கைத் துணைவி தொலைவாக இருந்து உள்ளம் நையவேண்டியவளாக இருக்கும் நிலையை எண்ணி நைந்தாள்! பெருமையும் உரிமையும் பாராட்டிப் பேராட்சி செய்யவேண்டிய இடத்தில் வெளியாரைப்போல விலகி நின்று வியப்பாகப் பழகும் வேறுபாடு எப்படி வாய்த்தது! என வியப்போடும் துயரோடும் எண்ணினாள்.

சிறிது உண்ட புகழேந்தி மீதியை அப்படியே வைத்துவிட்டு எழுந்து கை கழுவிக் கொண்டான்.

மல்லிகையாரை அணுகினான்.

"அம்மா, பலகாரம் சாப்பிட்டீர்களா?"

"எனக்கென்ன கேடு? நீ சாப்பிட்டாயா? உன்னைச் சாப்பிட்டாயா என்றுகூட கேட்கவில்லையப்பா?' எனக் கூறி விம்மினார் மல்லிகையார்.

அன்பமிழ்தமே ஊறிய அன்னையின் நாவில் வெறுப்பும் ஆற்றாமையும் கலந்த சொற்கள் வெளிவருவது கண்டு மனங்கசப்புற்ற புகழேந்தி அவர் அருகில் அமர்ந்தான்.

"அம்மா, மனமுடைந்து வருத்தமடைந்து உங்கள் உடம்பையும் கெடுத்துக் கொண்டால் எங்களுக்கு ஆறுதல் சொல்வது யாரம்மா?... நாம் எல்லாரும் பட்டினத்திற்கே போய்விடலாம் அம்மா."

"திண்டிவனத்திலிருக்கும் வீட்டைவிட்டு வர எனக்கு விருப்பமில்லை. உன் அக்கா அறப்பாவையும் மாமாவும் என்னோடு துணையாக இருக்கட்டும். நீயும் வெள்ளிவீதியும் சென்னைக்குப் போய் இருங்கள். பிறகு நானும் வருகிறேன்."

"என் வழக்கு முடிந்து விட்டதம்மா, என் சார்பில் தீர்ப்பாகிவிட்டது. மீண்டும் மாவட்ட ஆய்வாளர் பணியில் வந்து சேர ஆணையும் வந்து விட்டது. எனக்கு எதிராக வேலை செய்தவர்களின் ஊழலும் சூழ்ச்சியும் வீழ்ந்து விட்டது."

"உம். என்னவோ! நல்லபடி இருந்தால் சரி."

அன்னையின் விருப்பத்திற்கு மாறாகப் புகழேந்தி வற்புறுத்தவில்லை. அவர் துன்பத்தை அவன் எண்ணி உணர்ந்து உருகினான்.

'இன்று வெள்ளிவீதி எவ்வாறு பூவும் பொட்டுமாகப் புதுமைப் பாவையாகப் புத்தம் புதுக்குடிவிளக்காய்க் குமரிக் கொழுந்தாய்ப் பூத்த மலராய் அடியெடுத்து வைத்து வாழ வந்திருக்கிறாளோ; அவ்வாறுதானே மல்லிகையாரும் அவருடைய இளமை வயதில் வாழ வந்திருப்பார்! அப்பாவும் அம்மாவும் இந்த வீட்டில் ஐம்பதாண்டுகள் அளவில் இல்லற வாழ்க்கையை இணைந்து நடத்தியிருக்கின்றனர்! அம்மா! அரை நூற்றாண்டுக்காலம்! இன்பம்—துன்பம், இனிப்பு— கசப்பு, விருப்பு—வெறுப்பு, நன்மை— தீமை—ஆக்கம்—இழப்பு, உழைப்பு—ஓய்வு,—என எத்தனை எத்தனையோ வாழ்வடைவுகளை இந்த வீட்டில் அவர்கள் சுவைத்திருப்பார்கள்! ஆனால்... அவ்வளவும் இப்போது 'நினைவு' என்னும் அளவில் எண்ணிப்பார்க்கவேண்டிய கனவாக ஆகிவிட்டன! அடடா! நேற்றுபார்த்த திரைப்படத்தை இன்று நினைத்துப் பார்ப்பதுபோல வாழ்க்கையும் அமைந்து கிடக்கிறதே! கடந்த காலப் பெருவாழ்வு



வண்ணமிகு படைப்புகள்

வர்ணமய உலகம்

அதுவேகோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்

பட்டுகள் பிரமாதம்

நெசவே நெஞ்சையள்ளும்

குர்தாக்கள்

பெல் பாட்டம்கள்

லுங்கிகள்

சேலைகள்

உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள் . . .

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை . . .

ஆதாயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

எழும்பூர் :: சென்னை-8

இன்று நினைவு நிழலாக மாறிவிடுகிறது. அந்த நிலையில் ஆறுதல் அடையவேண்டியுள்ளதே! இதை அம்மா எப்படித்தான் பொறுத்துக் கொண்டிருக்கிறார்களோ? தந்தையின் நிலையான பிரிவை அவர்கள் எப்படித் தாங்கினார்கள்? இருவரும் எவ்வளவு அன்பானவர்கள்! என் கருத்தறிந்த நாள் முதலாக அவர்கள் பூசலிட்டதே கிடையாதே! அப்பா கருத்தை அம்மா மறுத்தே பேசியது இல்லையே! அம்மாவின் வேண்டுதல்களை—ஆவலை-அப்பாதானே உணர்ந்து நிறைவேற்றி விடுவாரே ஒருமனம் வாய்ந்த திருமண வாழ்க்கைக்கு இவர்களுக்கு நிகராக யார் இருக்க முடியும்? எனக்குத் தெரியாத எவ்வளவு நிகழ்ச்சிகள், அடைவுகள், உணர்வங்கள் அம்மாவுக்குத் தெரிந்திருக்கும். இந்த வீட்டின் ஒவ்வோரணுவும், ஒவ்வொரு பொருளும் அம்மாவின் வாழ்வோடு மிக அணுக்கமான உறவுடையன அல்லவா? அம்மா வாழ்க்கை நாடகத்தின் ஆடரங்கம் இதுதான் இந்த வளமார்ந்த வாழ்க்கை நாடக மேடையை—வீட்டை—விட்டுச் சென்னை வர அம்மாவின் உள்ளம் இசையுமா? ஊம்...” என எண்ணியவன், நெட்டுயிர்த்தான்.

மீண்டும் அறையினுள் சென்று சாய்வு நாற்காலியில் சாய்ந்தான்.

வெள்ளிவீதி குவளையில் சுக்குப்பால் கொண்டு வந்து கொடுத்தாள். அமைதியாகப் பருகினான்.

“நான் நாளை சென்னை செல்ல வேண்டும் எனக்குப் பழைய வேலை மீண்டும் கிடைத்து விட்டது. போனவுடன் ஒரு வீட்டைக் குடிக்கூலிக்கு ஏற்பாடு செய்தபின், வருவேன். நீ வர விரும்புகிறாயா?’’ எனக் கேள்வி தொடுத்தான்.

அந்த வினா வெள்ளிவீதியின் நெஞ்சைக் கிழித்து நெருப்பாற்றைப் பாய்ச்சியது.

புது ஆள் ஒருவரிடம் பேசுவது போலவும், சற்றும் உரிமைபாராட்ட முடியாத ஒருவரிடம் வினவுவது போலவும் அவன் பேச்சும் உணர்வும் இருந்தது.

“நாளை என்னோடு வா.’’ என ஆண்மையோடு உரிமையாகக் கட்டளையிடவில்லையே! என்னை அயலாகக் கருதியல்லவா செய்தி தெரிவிக்கிறார்! உரிமையோடு அழைக்க அவருக்கே மனம் வரவில்லை? மனைவியை இப்படியா மதிப்பது? உள்ளத்தில் அணுவளவேனும் அன்புணர்வு இருந்தால் என்னை எப்படியெப்படியெல்லாமோ ஆட்கொண்டு அடிமையாக்கி யிருக்கலாமே! அவர் அவற்றை விரும்பவில்லை! என்னைவிட முடியாத ஒருவர் போலக் கடமையுணர்வோடு அல்லவா பழகுகிறார்! பிரிவு—பிளவு—விலகல் இதுதான் இவர் குறிக்கோளா? நான் அவர் வாழ்வில் ‘குறுக்கிட்டு’ விட்டேனா? மக்கள் விரும்பாத போது தானே தைக்கும் முள் போன்றே நான் அவர் வாழ்வில் தைத்துவிட்டேனோ? நோய்கள் மக்களைத் திடீரெனத் தாக்குவதைப்போல அவர் வாழ்வைத் தாக்கி வாட்டுகிறேனா? ஐயோ! இப்படியொரு கொடுமை செய்யவா நான் பிறந்தேன்! என்னுயிர் நொடி தோறும் இமைப் பொழுதும் யாரைக் காதலால் எண்ணி ஏங்கி உருகியுருகி வழிபட்டுப் பேரின்பம் ஊட்டிக் களிப்பிக்கத் துடிதுடித்ததோ; அவருக்கு நொடிதோறும் நீங்காத் துன்பத்தைக் கொடுக்கும் தொற்று நோயாக ஆகி விட்டேனா?

(வளரும்)

சிறுகதை

# அணைப்பு

— இளங்கோதாசன்

அடர்ந்த காடுகள், சாலைநெடுக வளர்ந்திருக்கும் மணமற்ற மலர்கள், விண்ணைமுட்டும் நெடிதுயர்ந்த மரங்கள், சலசலத்து ஓடும் நீரோடைகள், துள்ளிவிழும் அருவிகள், பில்லர் ராக்ஸ், சில்வர் கேஸ்ட், உல்லாச ஏரி, அங்கு செல்வோரின் பற்களைத் தாளமிடச் செய்யும் கடுங்குளிர். இன்னும் உள்ள சிறப்பான அம்சங்கள் பல...பல...இவைதான் கோடைக்கானலின் தனிச் சிறப்புக்கள்.

மாலைச் சூரியனின் பொன்னிற ஒளிவெள்ளத்தில் மூழ்கிக் குளித்துக் கொண்டிருந்தது கோடைக் கானல்! கண்டவர் கண்கள் கற்பனையில் மிதக்க—கட்டிளங் குமரிகளின் நெஞ்சம் இன்பக் கனவுகள் காண—அன்றைய சூழ்நிலை உருவாகி இருந்தது. மாலைச் சூரியனின் மஞ்சள் நிற ஒளியில் பசுமை மிக்க தோட்டங்களும்—நெளிந்தும் சலசலத்தும் ஓடும் நீரோடைகளும்—துள்ளிவிழும் அருவிகளும் பார்ப்பதற்கு மிக ரம்மியமாகவும்—மனதிற்கு இன்பமூட்டுவனவாகவும் இருந்தது.

இவ்விதமான இன்பத்தின் சூழ்நிலையிலே 'சில்வர் கேஸ்டின் அருகில் சேகரால் நிம்மதியாக அமர்ந்திருக்க முடியவில்லை, மறையப் போகும் மாலைச் சூரியனின் ஒளியிலே வைரக் கற்களைப்போல் மின்னி துள்ளிவிழும் நீரின் அழகு; சில்லென வீசும் தென்றலின் தழுவல் இவையெல்லாம் அவனுடைய மனதை சலனப்படுத்தவே இல்லை.

உணர்ச்சிகளிலே உயிரில்லை—

சிந்தனையில் தெளிவில்லை—

கண்களில் கவர்ச்சியில்லை—

நெஞ்சத்திலே நெகிழ்ச்சியில்லை!

அவனுடைய நெகிழாத நெஞ்சத்தை நெகிழவைத்து; கவர்ச்சியில்லாக் கண்களிலே கவர்ச்சியூட்டி; தெளிவில்லா சிந்தனையில் தெளிவூட்டி; உயிரில்லா உணர்ச்சிகளில் உயிரூட்டும் மைவிழி கொண்ட தையலின் மலர்க்கரமொன்று அவனைத் தொட்டுத் தன் பக்கம் திரும்பியது. இதனால் அந்த மைவிழி கொண்ட தையலாளின் மலர்க் கரத்திலிருந்த வளையல்கள் இரண்டு ஒன்றோடொன்று மோதி இனிய ஓசையெழுப்பி அங்கு நிலவிக்கொண்டிருந்த மௌனத்தைக் கலைக்கவும் முற்பட்டது.

இந்த இனிய ஓசையின் காரணமாக திரும்பியவனின் கண்களுக்கு ஓவிய அழகுடன் நின்றிருந்த சாந்தி தென்பட்டாள். அதுதான் அந்த மலர்கரத்திற்கு உரிய பைங்கிளியின் பெயர். மற்ற நாட்களிளெல்லாம் அவளைப் பார்த்தவுடன் அவனுடைய கண்களிலும்—முகத்திலும்— இதழ்களிலும் மலர்கின்ற ஆவல்... மலர்ச்சி ... புன்னகை...ஆகிய ஒன்றுமே அப்போது அவனிடம் மலரவில்லை.

இதைக் கண்ட அந்த மலர்க் கொடியாளின் மதிமுகமோ ஏமாற்றத்தின் விளைவாக கூம்பிய மலராகியது. இருந்தாலும் காதலர்களின் வாழ்வில் இதுவும் ஒரு 'ஊடல்' என்றெண்ணினாள் சாந்தி.

அவளுடைய இளநெஞ்சம் இசை பாடியதால் 'அத்தான்' என்றழைத்தாள் நாதத்தை தோல்வியுறச் செய்யும் குயிலின் குரலில்.

'...........'

பதிலொன்றும் பிறக்காத காரணத்தால் அவளுடைய செம்மை நிறம் பொருந்திய அதரங்கள் மீண்டும் அசைந்தது. குயிலும் கூவியது—நாதமும் தோற்றோடியது.

'...........'

ஒரு ஹீங்காரமோ; 'ம்'காரமோ இல்லாத காரணத்தால் சேகருடைய மோவாயைத் தன் மலர்க் கரத்தினால் நிமிர்த்தி அவனுடைய கண்களை ஆராய்ந்தாள். அவனுடையக் கண்களிலே நீர் கோர்த்திருந்ததைக் கண்ட அவளால் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த இயலாமல் போகவே 'அத்தான்' ஏன் உங்கள் கண்கள் கலங்குகின்றன எனக் கேட்டு தன் கரங்களால் துடைத்து விட்டாள் சாந்தி.

அந்த மென்கரத்தின் ஸ்பரிசத்தில் தன்னுடைய துன்பத்தையும்-தான் சொல்லவந்த விஷயத்தையும் மறக்கமுயன்ற சேகருக்கு அது நடவாதகாரியமாக தெரியவே உணர்ச்சிகள் பொங்கிப் பீரிட: கண்ணீர்த் துளிகள் வழிந்தோட 'சாந்தி என்னை ம...மறந்து...விடு' என்று சொல்லி விட்டு அந்த இடத்திலிருந்து எழுந்து சென்றான் சேகர்.

அவன் தந்த 'அந்த' அதிர்ச்சியிலிருந்து விடுபடுவதற்கு அவளுடைய இளமை நெஞ்சம் சற்றே சிரமப்பட்டது, அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட்டவளின் பார்வையில் சேகர் தென்படவேயில்லை. அவளுடைய பார்வைக்கு அவன் திரையிட்டுச் சென்றான் என்றாலும் அவலுடைய 'நெஞ்சக் கதவிற்கு' அவனால் திரையிட்டுச் செல்ல முடியவில்லை. அதன் விளைவாக அவளுடைய நெஞ்சத்தின் கதவுவிலக சிறிதுசிறிதாக ஆரம்பித்தது. அதனால் நெஞ்சமெனும் வீட்டிலே உறைந்து கிடந்த பழைய எண்ணங்கள் தலைதூக்கின...அங்கே...

ஃ ஃ ஃ

'உனக்கும் எனக்கும்' என்ற திரைப்படத்தின் சில காட்சிகளை சில்வர் கேஸ்டில் படமாக்கிக் கொண்டிருந்தனர் திரைப்படக் குழுவினர். இதனால் சில்வர் கேஸ்டில் மக்கள் கூட ஆரம்பித்தனர். உணர்ச்சிகளின் பாதையில் படம் உச்சகட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் போது அங்கிருந்த சாந்தியும் உணர்ச்சி வசப்பட்டு அருகிலிருந்த சேகரின்

கரத்தை தன் தோழியின் கரமென்று எண்ணிப் பிடித்து அழுத்தினாள். மங்கையின் கரத்தில் சிறைபட்ட அவனுக்கு அவளிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள மனமில்லாமல்போனது. அவளுடைய கரங்களிலிருந்து பாய்ந்த மிதமான உணர்ச்சிகளின் பிரதிபலிப்பில் ஒருவகை இன்பத்தையே அனுபவித்துக் கொண்டிருந்தான் சேகர்.

ஒருகாட்சி எடுத்து முடிந்ததும் சாந்தியினுடைய தோழி என்னடி சாந்தி போகலாமா? என்று கேட்டவுடன் தன் தவறை உணர்ந்து வெட்கப்பட்டாள் சாந்தி,

"எக்ஸ் க்யூஸ் மி சார் ஐ ஆம் வெரிசாரி" என்று கூறிய; அழகிய சாரியணிந்த அவள் வெட்கப் புன்னகை ஒன்றை வீசி அவனை ஏதோ ஒரு இன்பம் நிறைந்த கிறக்கத்தில் மிதக்கவைத்து விட்டு சிட்டாகப் பறந்து செல்லாமல் அன்னத்தைப் போன்று அழகாக நடைபோட்டு கார்குழல் கதிராட; வண்ணமிகு பொன்மேனியில் மூடி வைத்தப் பாற்குடங்களின் சுமை தாங்கா இடையோ ஒடிந்துவிழும் நிலைகாண; சந்தனக் கால்களின் சதிராட்டத்தில் பின்னழகோ அசைந்தாட; கார்குழலோ அவளின் பின்னழகில் ஓடியாடி விளையாட; அவள் நடந்துசென்ற விதமோ நாட்டியமாகவே தெரிந்தது சேகரின் காவியக் கண்களுக்கு!

அவரவர் இல்லங்களுக்குச் சென்ற இருவரின் உள்ளத்திலும் காதல் மலர் மலரத் தொடங்கியிருந்தது. ஒருமித்த இருவரின் உள்ளங்களும் ஓராயிரம் கனவுகள் கண்டு ஆயிரமாயிரம் காதல் சாம்ராச்சியங்களை சிருஷ்டித்த வண்ணமிருந்தது.

மறுநாள்!

சில்வர் கேஸ்டில் ஏக்கம் நிறைந்த உள்ளத்துடன் அமர்ந்திருந்தான் சேகர். அவனுடைய எண்ணத்தையும்; ஏக்கத்தையும் பிரதிபலிப்பதைப் போல அன்பின் பிறப்பாலும்; காதலின் துடிப்பாலும் அவனிருந்த இடத்தையே நாடிவந்தாள் சாந்தி. திடீரென மலரின் நறுமணம் வெகு அருகிலிருந்து வந்து அவனுடைய நாசியில் நுழைந்து சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்ததால் சற்றே திரும்பினான் சேகர். அங்கே—

கருங்குழல் கார்மேகத்தை தாங்கியிருக்க; கண்களோ காதலைச் சொல்ல; முகமோ கோல நிலவுதனை காட்ட; பவள இதழ்களோ பரிசொன்றை எதிர் பார்க்க; ஒற்றைச் சங்கிலி தவழ்ந்த கழுத்தோ சங்குதனை பிரதிபலிக்க, விம்மித் தணிந்த மார்பகமோ மாங்கனியை நினைவூட்ட; இருபுறமும் வளித்து விடப்பட்ட இடையோ படரும் கொடி போலிருக்க; நிலமடியில் பதிந்திருந்த கால்களோ சந்தன கட்டையாக காட்சி தந்தது. மீண்டும் அவளுடைய கண்களை சந்தித்தபோது சாந்தியின் காந்தக் கருவிழி ஈர்ப்பில் அவனுடைய கண்கள் இரும்பாகி நிலைத்து நின்றது கண்கள் மட்டுமல்ல உள்ளமுங்கூடத்தான்.

அங்கு அப்போது நிலவிய அந்த மௌன நிலையில் அவர்களிருவரும் பேசிய ஊமைமொழிகளை இங்கு எழுத முடியாமைக்கு வாசக நண்பர்களிடம் மன்னிப்பைக் கோரித் தொடர்கின்றேன். காதல் மலர்ந்த பிறகு பலமுறை சந்தித்துப் பல கதைப் பேசினார்கள். கனவுகள் சில கண்டார்கள். அவன் ஊர்திரும்பியவுடன் கடிதங்களின் மூலம் தங்கள் உள்ளத்து உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொண்டார்கள். இதுதான் அவர்களுடைய காதல் மலர்ந்த விதமும்; வளர்ந்த நிலையும்.

ஃ ஃ ஃ

சேகர் தந்த அதிர்ச்சியிலிருந்தும்; பழைய வாழ்க்கை எனும் அலைகளிலும் சிக்கிச் சுழன்ற சாந்தியை அவளுடைய தோழி சுஜாவின் குரல் நினைவெனும் கரையில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தியது. தன் மார்பகம் விம்மித் தாழும் வண்ணம் பெருமூச்சொன்றை தன் உள்ளச் சிறையிலிருந்து விடுதலை செய்துவிட்டு தன் தோழி சுஜாவை கண்ணீர் ததும்பும் கண்களுடன் ஏறிட்டு நோக்கினாள் சாந்தி.

"என்னடி சாந்தி ஏன் உன் கண்ணு கலங்குது?" என்றாள் சுஜா. பாசமிக்க அந்தக் கேள்வி சாந்தியினுடைய துயரத்தை அதிகமாக்கிக் கண்ணீர்த் துளிகளை அவளுடைய செழுமையானக் கன்னங்களிலே ஓடச் செய்தது. அதைக் கண்ட சுஜாவின் பிஞ்சு விரல்கள் அதைத் துடைத்து விட்டது. "சுஜாவினால் அந்தக் கண்ணீர்த் துளிகளைத்தான் துடைத்துவிட முடிந்ததேதவிர சாந்தியினுடைய நெஞ்சத்தில் ஏற்பட்ட துயரத்தை அவளால் துடைத்துவிட இயலவில்லை."

கண்ணீரைத் துடைத்துவிட்ட தன் தோழியை ஆரத்தழுவிக் கொண்டு; சுஜா..அ..அ...வரை...நா...ன்...ம...ம...றந்து விட வேண்டுமான்டி...என்று தேம்பி தேம்பி அழுதவண்ணம் கூறினாள் சாந்தி.

'சரிடி சாந்தி இதுக்காகவா அழுற' என்று அழைத்து ஆறுதல் சொன்னாள் சுஜா. பின்பு அவளுடன் தன் இல்லத்தை நோக்கிச் சென்றாள் சுஜா. அப்படி அவள் செல்லும் போது அவளுடைய மனம் பின் வருவன போல் நினைத்தது. "காதல்" இந்த மூன்றெழுத்தை தங்களுடைய கவிதைகளிலும், கதைகளிலும் கையாளாத கவிஞர்களும் — கதாசிரியர்களும் இப்புவியில் பிறக்கவே மாட்டார்களோ!

காதலில் வெற்றியடையும் காதலர்கள்; அதே காதலில் தோல்வியடையும் போதுதான் வேதாந்தமும்; தத்துவமும் பேசி அம்பிகாபதியைப் பார்; அனார்கலியைப்பார்; லைலா மஜ்னுவைப்பார் அவர்களுடைய காதலெல்லாம் தோல்வியுற்றதால்தான் அனைவரும் சரித்திரத்திலே சாகாத இடத்தைப் பெற்றிருக்கின்றனர் என்று சப்பைக்கட்டுக் கட்டுவார்கள். ஒருவேளை மனிதப் படைப்பின் விசித்திரமே இதுதானோ? என்று நினைத்து முடியவும் அவர்களுடைய இல்லங்கள் வருவதற்கும் சரியாக இருந்தன. தோழிகள் இருவரும் அவரவர் இல்லங்களுக்குள் நுழைந்தனர்.

சேகர் சொல்லிச் சென்ற மறுநாள் சாந்தியும் சுஜாவும் அவன் தங்கியிருந்த தங்கும் விடுதியை அடைந்து அவனிருந்த அறையின் கதவைத் தட்டியவுடன் எஸ்...கம்...இன்...என்று அழைப்பு வந்தவுடன் கதவைத் திறந்த இருவரும் திகைத்து நின்றனர். அங்கே—

சாந்தியினுடைய புகைப் படத்தை பார்த்தவாறு கட்டிலில் அமர்ந்திருந்தான் சேகர். அவளை அவனால் எப்படி மறக்க முடியும்? காதல்—என்ன அப்படி லேசுப்

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

**எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!**

## சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

**சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.**

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் ... | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

**இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.**

**இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறு சேமிப்புத் துறை,**
**தமிழ்நாடு அரசு.**


பட்டதா? ஆபீஸ் பையன் என்றெண்ணித்தானழைக்க; அவன் அழைப்பை ஏற்று உள்ளே வந்த ஆரணங்குகளைக் கண்டவுடன் நிலை தடுமாறினான் சேகர். அவன் மட்டுமா நிலைதடுமாறினான்... அவனைப் பார்க்கவந்த பைங்கிளிகள் இரண்டுங்கூட நிலைதடுமாறித்தான் நின்றன அவனுடைய விந்தை உள்ளத்தை எண்ணி...!

அவளுடைய புகைப்படத்தை மறைத்தவாறு வா...சா...ந்தி... வா...என்றழைத்தான் .சேகர்.

சிறிது நேரமாக அங்கு நிலவிக் கொண்டிருந்த மௌனத்தைக் கலைத்து "ஏங்க அத்தான் நேத்து அப்படிச் சொன்னீங்க" என்று வினவினாள் சாந்தி.

முன் தினம் தான் சொல்லியது அவளுடைய இளமை நெஞ்சத்தை எவ்வளவுதான் வேதனைப்படுத்தியிருந்தாலும்; தன் உறவை நிலைநாட்டும் பொருட்டு அவள் தன்னை அத்தான் என்றழைத்ததால் மிக்க மகிழ்ச்சியடைந்தான் சேகர்.

ஒருமித்தக் காதலர் இருவர் மனம் விட்டுப் பேசும்போது மூன்றாவது மனிதராகிய நாம் அருகிலிருப்பது சரியல்ல; அது நாகரிகமுமல்ல என்றெண்ணிய சுஜா; சாந்தி நீ பேசிக்கிட்டு இரு......கொஞ்ச நேரத்தில் நான் வந்துடுறேன் என்று சொல்லி வெளியே சென்றாள் சுஜா...

சாந்தி! என்னை மறந்துவிடு என்று சொன்னதற்குக் காரணம் என் பெற்றோர்களோ; பணமோ; அந்தஸ்தோ அல்லது நம்மிடையே உலவுகின்ற 'சாதிங்கிற' இடைவெளியோ எதுவுமேஇல்லை...நான் சொன்னதற்கு காரணம் என் மனசாட்சிதான். நீ நினைக்கலாம் நான் வேறு எந்த பெண்ணையாவது...! அப்படி ஒரு நினைப்பு உன் மனசுல இருந்தா அதை மாற்றிக்கொள் சாந்தி...உன்னைத்தவிர வேறொருத்தியை நான் கனவுலகூட நினைத்தது கிடையாது என்று கூறி நிறுத்தினான் சேகர்.

அவன் கடைசியாகக் கூறிய அந்த வார்த்தைகளால் அவள் சற்றே ஆனந்தப்பட்டாள். அந்த ஆனந்தத்தின் ஒரு மூலையில் பிறகு ஏன் என்னை மறந்துவிடும்படி கூறினார்? என்றக் கேள்விக்குறியொன்று அவள் மனதில் எழுந்து நின்றது. அவன் அடுத்துக் கூறிய விஷயம் அந்தக் கேள்விக்குறியை பெரிதாக்கியதா? அல்லது அவள் உள்ளத்திற்கு விடையானதா? என்று என்னால் கண்டுகொள்ள இயலவில்லை. காரணம்—'பெண்களின் உள்ளந்தான் கடலைவிட ஆழங் காண முடியாத ஒன்றாயிற்றே!'

உன்னைத் திருமணம் செய்து உன் வாழ்வையும் என்னோடு சேர்த்து பாழ்படுத்த விரும்பவில்லை சாந்தி ... காரணம். நான் ஒரு......! என்று நிறுத்திப் பெருமூச்சு விட்டான் சேகர்.

சொல்லுங்க அத்தான், ஏன் தயங்குறீங்க?ம் நீங்கள் ஒரு......! அவனை நெருங்கி வந்து கேட்டாள் சாந்தி.

சாந்தி எனக்கு கைகாலெல்லாம் நடுங்குது. உன் கரங்களைப் பிடித்

துக் கொள்ளட்டுமா? என வினவினான் சேகர்.

உங்களுக்காகவே வாழ்ந்தும்; வாழவும் காத்துக்கிட்டு இருக்கின்ற என்னை ஏங்க அத்தான் இப்படி சித்ரவதை செய்யிறீங்க? என்று சொல்லி அவனைத் தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்டு அவனுடைய முகத்தில் படிந்திருந்த வேர்வைத் துளிகளை தன் சேலைத் தலைப்பால் துடைத்துவிட்டாள் சாந்தி.

சற்றே இளைப்பாறிய சேகர்! 'நான் ஒரு சயரோகி சாந்தி சயரோகி' என் உடலில் இது முற்றிவிட்டது சாந்தி என்றான் சேகர்,

இதற்காகவா அத்தான் உங்களை மறந்துவிடச் சொன்னீர்கள். நான் என்னவோ, ஏதோவென்று நினைத்து பயந்துவிட்டேன் அத்தான். உங்களுடைய பேச்சின் படியே வைத்துக் கொள்வோம். நம்மால் எப்படி அத்தான் பிரிந்து வாழமுடியும். 'காதலே ஒரு நோய் தானே!' உங்களுடைய சயரோகத்தைவிட இந்த காதல் நோய் இருக்கின்றதே அது மிகவும் பொல்லாததுங்க அத்தான். சயரோகத்திற்கு கூட மருந்து உண்டுங்க அத்தான். ஆனால் காதல் நோய்க்கு மருந்தே கிடையாதுங்க அத்தான். அதற்குரிய மருந்து மரணம் ஒன்றுதான் ...அதனால் அதற்கு எந்தவித பயனுங் காட்ட முடியாதுங்க அத்தான் என்றாள் சாந்தி.

"அப்ப என்னையே திருமணம் செய்து அவதிப்படப் போறியா சாந்தி"—இது சேகர்.

"அவதிங்கிறதை விட ஆனந்தம்னு சொன்னா நல்லா இருக்குங்க அத்தான்" இது சாந்தி.

"இளமையின் உணர்ச்சியில் பேசாதே சாந்தி. நிதானமா நல்லா யோசித்துச் சொல்லு. நான் ஒரு ......" சேகரை முடிக்கவிடாமல் அவன் வாயைப் பொத்தினாள் சாந்தி.

"இரவும் பகலும்போல இன்பமும் துன்பமும் கலந்ததுதான் அத்தான் வாழ்க்கை. இன்பத்தோடு சரிநிகர் சமமாக துன்பத்தையும் அனுபவித்தால் தான் வாழ்க்கைங்கிறது என்னுனு புரியுங்க அத்தான. அதுதான் வாழ்க்கையாகவும் இருக்கும். இன்பத்தை மட்டும் நாடிச் செல்லும் வாழ்க்கைக்கு அர்த்தமே இல்லீங்க அத்தான். இன்பமும் துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை. இதுதான் மனித வாழ்க்கையின் உள்ளடங்கம் அத்தான்" என்று கூறிய சாந்தியை தன் பக்கம் இழுத்தான் சேகர்.

ம்...விடுங்க அத்தான் யாராவது வந்துடப் போறுங்க என்று கூறிய சாந்தி கதவைப் பார்ப்பதற்கும், வளையல்களணிந்த மலர்க் கரமொன்று கதவைச் சாத்தி தாழிடுவதற்கும் சரியாக இருந்தது.

சேகரின் வலிய கரமொன்று சாந்தியின் மெல்லிடையில் ஊர்ந்து செல்லும்போது ஒரு உண்மையைக் கண்டான். 'மென்மையும் பெண்மையும் கலந்து ஒருமித்தவள்தான் பெண்' என்பதை உறுதிபடுத்துவதுபோல அடுத்து சில நிகழ்ச்சிகள் அங்கே அரங்கேற்றமாகியது. தன் நெஞ்சோடு நெஞ்சாக அணைத்து 'சாந்தி நம்முடைய இந்த உறவு நிலைக்குமா?' என்று கேட்க...அத்தான் உங்களுடைய இந்த அணைப்புத்தான் நம் வாழ்க்கையின் உறவை நிலைநாட்டும் இணைப்பாக மாறிவிட்டதே என்று கூறிய சாந்தி அவனுடைய அணைப்புக்கு மெருகூட்டுவது போல் அவனை அணை..

"ம்......அதற்குள்ள ஆசையப் பாரு" என்று திக்கித் திணறி வந்த குரலால் அங்கு நடப்பதை ஒருவாறு கதவிற்கு வெளியில் நின்ற சுஜாவால் ஊகிக்க முடிந்தது. அதற்குமேல் அங்கு நடந்ததையோ; பேசியதையோ; எழுத்தில் வடிக்கமுடியாத அளவிற்குப் பிறந்த ஒலிகளையோ அவளால் கேட்கமுடியாத அளவிற்கு உணர்ச்சிகள்; சிந்தனை எனும் திரையிட்டு மூடப்பட்டு இருந்தது. இனிமேல் நமக்கென்ன அங்கே வேலை! அவர்களுடைய வாழ்வு தொடரப் போகும் இந்நேரத்தில் நாமும் நம்முடைய கண்களுக்கும்; இல்லையில்லை கற்பனைக்கு மட்டும் திரையிடுவதுதான் நல்லது. திரை உங்களுடைய கற்பனைக்கு மட்டுந் தானே தவிர; உங்களுடைய முற்போக்கான சிந்தனைக்கு அல்ல...


## வெளிவருகிறது!

# 'காஞ்சி'

## அறிஞர் அண்ணா — பொங்கல் சிறப்பு மலர்

### பேரறிஞர் அண்ணாவின் படைப்புக்களுடன்

கழகத் தலைவர் கலைஞர்

கழகப் பொதுச்செயலாளர் நாவலர்

மற்றும்

அமைச்சர் பெருமக்கள்

அருந்தமிழ்ச் சான்றோர்கள்

இளைய தலைமுறையின்

இலட்சிய எழுத்தாளர்கள்

அனைவரின் எழுத்தோவியங்களைத் தாங்கி - எழில்மிகு மூவண்ண முகப்போடு தைத்திங்களில் வெளிவரவிருக்கிறது.

கவிஞர் மணிவேந்தன் அவர்களின் "பயிற்றுப் பாவியம்" சிறப்பு மலரில் இடம் பெறுகிறது.

கவிஞர் தமிழ்ச் சுரபியின் "அண்ணா பிள்ளைத் தமிழ்" தொடரோவியம் சிறப்பு மலரிலிருந்து தொடர்ந்து வெளிவரவிருக்கிறது.

விவரங்கட்கு:

மேலாளர்,

"காஞ்சி" அலுவலகம் :: காஞ்சிபுரம்-3.




## பன்னிரண்டு ஆண்டுகளில்
## வருவாய் இரட்டிப்பாகிட
## தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

**குடும்பநலத் திட்டம்**

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம் —
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

# அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
# இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3,
66, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.